செய்தி வெளியீடு:513 2.7.2008

# கடலூருக்கு அருகில் நாகார்ஜுனா நிறுவனத்தின் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலை! திருச்சோபுரம் துறைமுகத் திட்டம்! குட்ளர்த் நிறுவனத்தின் கப்பல் கட்டும் துறைமுகம்!

## 7 ஆயிரத்து 290 கோடி ரூபாய் முதலீட்டில் மூன்று திட்டங்கள்!

## முதலமைச்சர் கலைஞர் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்

தமிழக அரசின் டிட்கோ நிறுவனம், நாகார்ஜுனா உரம் மற்றும் இரசாயன நிறுவனம், டாடா குழுமம் மற்றும் கடலூர் துறைமுகக் கம்பெனி ஆகியவற்றுடன் இணைந்து ஆண்டுக்கு 60 இலட்சம் டன் திறன்கொண்ட ஒரு பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைத் திட்டத்தை கடலூருக்கு அருகில் 4 ஆயிரத்து 790 கோடி ரூபாய் முதலீட்டில் கூட்டுத் துறையில் தொடங்கிட திட்டமிட்டுள்ளது.

ஏறத்தாழ 33 மாதங்களில் இத்திட்டத்தின் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, 2011 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும். நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின் இந்த பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தமிழ்நாட்டில் அதிகபட்ச முதலீட்டில் உருவாகும் திட்டமாகும். தமிழகத்தின் போக்குவரத்து மற்றும் ஏனைய துறைகளின் எரிபொருள்கள் தேவையை நிறைவு செய்ய இத்திட்டம் பெரிதும் உதவும்.

### திருச்சோபுரம் துறைமுகத் திட்டம்

புதிய தொழில் திட்டங்கள் மற்றும் எதிர்கால மின் உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்வதற்குப் பயன்படும்வகையில் ஆண்டுக்கு 250 இலட்சம் டன் சரக்குகளைக் கையாளும் திறனுடன் 1500 கோடி ரூபாய் முதலீட்டில் நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின்மூலம் திருச்சோபுரத்தில் ஆழ்கடல் துறைமுகம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இத்துறைமுகம், கடலூர் மற்றும் நாகை மாவட்டங்களில் உருவாகவிருக்கும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் உற்பத்திக்கான தொழில்களுக்கு ஒரு முக்கிய கடல்சார் உள்கட்டமைப்பாகவும் விளங்கும்.

**<u>சிலம்பிமங்கலத்தில் கப்பல் கட்டும் தளம்</u>**

கடலூருக்கு அருகில் சிலம்பிமங்கலம் என்ற இடத்தில் குட் எர்த் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் 75 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட புதிய கப்பல்களைக் கட்டும் தளம் 1000 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்படவிருக்கிறது. கடலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இக்கப்பல் கட்டும் தளம் அமைப்பதற்குத் தேவைப்படும் சாதனங்களை உருவாக்கிட சிறுதொழில்கள் பல பெருமளவில் உருவாகக் கூடிய வாய்ப்புகளும் ஏற்படும்.

மொத்தம் 7 ஆயிரத்து 290 கோடி ரூபாய் முதலீட்டில் அமையும், நாகார்ஜுனா நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் திட்டம், திருச்சோபுரம் துறைமுகத் திட்டம், சிலம்பிமங்கலத்தில் குட்எர்த் நிறுவனத்தின் கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களையும் முதலமைச்சர் கலைஞர் இன்று (2.7.2008) அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்.

இந்த மூன்று திட்டங்களின்மூலமும், துணைத் தொழில்கள் மூலமும் ஏறத்தாழ 5 ஆயிரத்து 700 பேருக்கு நேரடியாகவும், 11 ஆயிரத்து 300 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வின்போது, தமிழக மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.வெள்ளக்கோவில் சாமிநாதன், மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் திரு. கே. வேங்கடபதி, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., தொழில்துறைச் செயலாளர் திரு.எம்.எப்.ஃபரூக்கி, இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் திரு. கே. அலாவுதீன், இ.ஆ.ப., டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ்.இராமசுந்தரம், இ.ஆ.ப., கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு. சி.முத்துக்குமாரசுவாமி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

............................................................................

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.